**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.**

முன்னிலை: திரு.S.வேல்சூர்யா,B.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருச்சுழி.

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07 ம் நாள் செவ்வாய்கிழமை.

**இடைநிலை மனு எண்.10/2025**

இன்

**அசல் வழக்கு 61/2021**

*****

1. தியாகராஜன்
2. ராமலட்சுமி .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. கருப்பையா
2. சின்னச்சாமித்தேவர் (இறந்துவிட்டார்)
3. எட்டப்பன்
4. கலைச்செல்வன்
5. ராக்கம்மாள் (இறந்துவிட்டார்)
6. பாண்டிஸ்வரி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 14.08.2025 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பார்த்தசாரதி,B.Sc.B.L., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ்,B.Com.,B.L., அவர்கள் ஆஜராகியும், 4 ம் எதிர்மனுதாரர்/4 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் 4 ம் பிரதிவாதியிடமிருந்து எந்த தகவலும் இல்லை என்று எடுத்துரைத்துள்ள நிலையிலும், 5 ம் எதிர்மனுதாரர்/5 ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 6 ம் எதிர்மனுதாரர்/6 ம் பிரதிவாதி தோன்றாத் தரப்பினரான நிலையிலும், இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 07.10.2025 ம் தேதியன்று வந்தபோது, இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

1. அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக இவ்வழக்கின் சந்தர்ப்பங்களில் தனது தரப்பில் கூடுதல் சாட்சியம் அளிப்பதற்கு ஏதுவாக

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட தன்னை மீண்டும் அழைத்து (Recall) மேற்கொண்டு கூடுதல் சாட்சியம் பெறுவதற்கு ஏதுவாக தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல்.

**2. <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்</u>:-**

2(1). மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இவ்வழக்கின் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சியாக தான் விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டதாகவும், தான் கடந்த 1990 முதல் 2021 வரை சௌதி அரேபியாவில் ஓட்டுநராக பணியாற்றி வந்ததாகவும், தன் தாய்நாட்டை விட்டு வெளியே சென்று 3 வருடத்திற்கு ஒரு முறை அல்லது நான்கு வருடத்திற்கு ஒரு முறை இந்தியா வந்து ஒரு சில மாதங்கள் தங்குவதாகவும், மேலும் தான் அயல்நாட்டில் இருந்த காலங்களில் அங்கிருந்து தனது மனைவிக்கு அனுப்பிய தொகையை கொண்டு தன் மனைவி 2ம் மனுதாரர் தாவாச் சொத்தினை அவர் பெயருக்கு கிரையம் பெற்றுள்ளதாகவும், மேலும் தன்னை எதிர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த சமயம் தான் சௌதி அரேபியாவில் வேலை பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்வதாகவும் தன்னை குறுக்கு விசாரணை செய்யப்பட்ட அச்சமயமே தான் இத்தகைய கூற்று அபாண்டமானது சாட்சியத்தில் ஆட்சேபித்ததாகவும், மேற்படி செயலின் வழியில் தான் அயல்நாட்டில் பணியில் இருந்துள்ளேன் என்ற விபரம் ஆவணப்பூர்வமாக நிரூபிக்கும் வாய்ப்புள்ளதாகவும், இவ்விதம் தான் அயல்நாட்டில் இருந்து வந்துள்ளேன் என்பதை காட்டும் வகையில் இந்திய அரசாங்கம் தனக்கு வழங்கிய கடவுச்சீட்டுகள் மற்றும் சௌதி அரேபியாவில் அரசினால் தனக்கு வழங்கப்பட்ட வாகன ஓட்டுநர் உரிமம் ஆகியவை சம்பந்தப்பட்ட ஆவணங்களை தன் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

2(2). மேற்படி இது சம்பந்தமாக தன்னை குறுக்கு விசாரணை செய்த சமயம் தான் அயல் நாட்டில் பணியில் இருந்தது குறித்து எதிர்தரப்பில் சந்தேகம் எழுப்பும் வகையில் கேள்வி எழுப்பியுள்ள நிலையில், அது குறித்த உண்மை விவரங்களை ஆவணப்பூர்வமாக நிரூபிக்க வேண்டிய கடமை தனக்கு உள்ள நிலையில் ஆவணங்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், தற்போது கூடுதல்

சாட்சியத்தில் ஏற்றுக்கொள்ள விழையும் ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாத தவறு மனப்பூர்வமாக ஏற்பட்டதல்ல என்றும், எனவே மனுவுடன் ஆஜர் செய்துள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாத தவறினை மன்னித்து, மேற்படி ஆவணங்களை சாட்சியத்தில் ஏற்றுக் கொள்ள ஏதுவாக தகுந்த உத்தரவுகள் பிறப்புவிக்க வேண்டி இம்மனு தாக்கல்.

3. <u>1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>:–

1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில், அபிடவிட்டு பாரா 2ல் கண்ட விசயங்கள் ஆட்சேபிக்கப்படுவதாகவும், மனுதாரர் தான் 1990 முதல் 2021 வரை சவுதி அரேபியாவில் ஓட்டுநராக பணியாற்றி வந்ததாக கூறுவதும், தாய்நாட்டை விட்டு வெளியே சென்று 3 வருடத்திற்கு ஒருமுறை அல்லது 4 வருடத்திற்கு ஒருமுறை ஒரு சில மாதங்கள் தங்கிவிட்டு மீண்டும் சவுதி அரேபியாவில் பணி காரணமாக சென்று வந்ததாக கூறுவது ஆட்சேப்பிக்கப்படுவதாகவும், மனுதாரர் உண்மையில் அயல்நாட்டில் வேலை பார்த்தாரா அல்லது இந்தியாவில் இருந்தாரா என்பது இந்த வழக்கில் தீர்க்க வேண்டிய பிரச்சனை இல்லை என்றும், இந்த ஆவணங்கள் மனுதாரர் கைவசம் முதலிலேயே இருந்திருந்தால் அதை ஏன் பிராது தாக்கல் செய்தபோதே அல்லது முதல் விசாரணை தாக்கல் செய்தபோதே ஏன் தாக்கல் செய்யவில்லை என்பதற்கான விளக்கம் எதுவும் அபிடவிட்டில் இல்லை என்றும், மேற்படி மனுவானது வீணானது மற்றும் அலைக்கழிவானது என்பதாலும் மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என் தெரிவித்துள்ளார்.

4. மனு, அபிடவிட் மற்றும் எதிர்உரை பரிசீலிக்கப்பட்டது. உபய தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவ்வாறே சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. தீர்வுமுடிவு:–**

7(1). மனு, எதிருரை, வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

7(2). மனுதாரர்கள் தரப்பில் 1ம்மனுதாரர்/1ம் பிரதிவாதி தியாகராஜன் கடந்த 1990ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை சவுதி அரேபியாவில் ஓட்டுநராக பணியாற்றி வந்தார் என்றும், 3 முதல் 4 வருடங்களுக்கு ஒரு முறை இந்தியா வந்தார் என்றும், மேற்படி அயல்நாட்டில் வேலை பார்த்து அனுப்பிய தொகையினைக் கொண்டு தான் தாவா சொத்தினை 2ம் எதிர்மனுதாரரான அவரது மனைவி பெயரில் கிரையம் பெற்றுள்ளார் என்றும், 1ம்மனுதாரர் வெளிநாட்டில் இருந்தது குறித்து குறுக்கு விசாரணையில் கேள்வி கேட்கப்பட்டதால் அது தொடர்பான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரர் உண்மையில் அயல்நாட்டில் வேலை பார்த்தாரா? அல்லது இந்தியாவில் இருந்தாரா? என்று இந்த வழக்கில் தீர்க்க வேண்டிய பிரச்சனை இல்லை என்றும், மேற்படி ஆவணங்களை பிராது தாக்கல் செய்யும் போதே ஏன் தாக்கல் செய்யவில்லை என்ற விளக்கம் அபிடவிட்டில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

7(3). வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில் அசல் வழக்கில் 1ம்மனுதாரர்/1ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். கடந்த 24.01.2025ம் தேதியில் பி.வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது அவரிடம் கீழ்கண்டவாறு கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. ***"அரேபியா அரசாங்கத்தில் வேலை செய்ததற்கான ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தற்போது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது பாஸ்போர்ட் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நான் எப்போதெல்லாம் இந்தியாவிற்கு வந்தேன் என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்"*** என்றும், மேலும் கடந்த 28.02.2025 தேதியில் நடைபெற்ற குறுக்கு விசாரணையின் போது ***"நான் சவுதி அரேபியாவில் வேலை***

***பார்த்ததாக சொல்வது எல்லாம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல"*** என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் கடந்த 03.07.2025ம் தேதியில் பி.வா.சா.1 குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிவு பெற்ற பின்னர் தான் வெளிநாட்டில் பணிபுரிந்து வந்ததை நிரூபிக்கும் விதமாக கடவுச்சீட்டுகள் மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றின் அசல்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அனுமதி கேட்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் 1ம்மனுதாரர் வெளிநாட்டில் இருந்தாரா? இல்லையா? என்பது இவ்வழக்கில் தீர்க்க வேண்டிய பிரச்சனை இல்லை என்று தெரிவித்திருந்தாலும், குறுக்கு விசாரணையின் போது எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி கேள்விகளை எழுப்பியதாலும் அதற்கு 1ம்மனுதாரர் அது தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருப்பதாக தெரிவித்துள்ள நிலையில் மேற்படி ஆவணங்களை கூடுதல் சாட்சியமாக அளிப்பதற்கு ஏதுவாக பி.வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து (Recall) உத்தரவிடுவது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது

<u>8. இறுதிமுடிவு</u>:-

இறுதியாக, மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

*இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு* ***2025-ஆம் ஆண்டு அக்டோபர் 07ம்*** *நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.*

(ஒம்./- S.வேல்சூர்யா.,), (07.10.2025)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

---------------------------
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
திருச்சுழி.
இ.ம.எண்.10/2025
இன்
அ.வ.எண்.61/2021.
சீரான/வரைவு /உத்தரவு
நாள்: 07.10.2025
--------------------------